# அக இலக்கியங்கள் காட்டும் தலைவி : பரத்தை வாழ்வியல் நெறிகள்

**முனைவர்.மா.மாரியம்மாள்**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, எம்.வி.முத்தையா அரசினர் மகளிர் கலைக்கல்லூரி,திண்டுக்கல்

---

சமுதாய நிறுவனங்களை வரிசைப்படுத்தும் சமுதாயவியலார் மொழி, இலக்கியம் ஆகியவற்றையும் அவற்றுள் அடக்குகின்றனர். இலக்கியம் அது தோன்றிய சமுதாயத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் இயல்புகளையும் மொழியின் மூலம் வெளிப்படுத்தும் கலையாகத் திகழ்கிறது. 'இலக்கியத்தின் உட்பொருளை வாழ்க்கை தந்து உதவுகிறது. படைப்பாளி வாழ்க்கை என்னும் மூலப் பொருளோடு கலையழகு என்னும் வண்ணத்தைக் கலந்து கற்பனை என்னும் மெருகிட்டு இலக்கியத்தைப் படைக்கிறான்' என்பது திறனாய்வாளர்கள் கூறும் கருத்து. அந்த வகையில் பெண்களின் வாழ்க்கை என்னும் மூலப்பொருள் செவ்வியல் இலக்கியங்கள் முதல் இன்றைய கவிதைகள் வரை அனைத்துப் படைப்புகளிலும் அவற்றின் அடிப்படைக் கூறுகளுள் ஒன்றாகக் கலந்தமைந்துள்ளது.

பெண்களுக்கான ஒழுக்கம் மற்றும் வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கொடுத்துள்ள சமூகம் பெண்களில் இரு வகையினரைப் படைத்துக் கொண்டுள்ளது. தலைவி X பரத்தை என்ற அந்த இரு வகையினரும் ஆண்களின் மகிழ்வுக்கும் சுகபோகத்திற்கும் உறுதியாக நிலைப்படுத்தப்பட்டவர்கள். தலைவி தலைவனது மகிழ்ச்சிக்காகவும் அவனது சமூக மதிப்பைக் காக்கவும் கடமையாற்றுபவள். பரத்தை தலைவனுக்கு இன்பம் கொடுப்பதற்காக வாழ்பவள். இந்த வகையில் ஒரு தலைவனுக்காக இரண்டு நெறிப்பட்ட பெண்கள் இயங்கிக் கொண்டிருப்பதை அக இலக்கியங்களின் வழி அறியமுடிகிறது.

### தலைவியின் வாழ்வியல்

சமூகத்தில் நிலவிய பெண் ஒடுக்குமுறை இலக்கியத்தில் பிரதிபலிக்கிறது. ஆண்களாலும் ஆண் முதன்மைச் சிந்தனை கொண்ட பெண்களாலும் படைக்கப்பட்ட அக இலக்கியங்கள் பெண்ணின் வாழ்க்கையை விளக்கமாகத் தருகின்றன. பெண் என்பவள் 'நல்ல மனைவி' என்ற ஆழமான புரிதலை ஏற்படுத்தும் நோக்கிலேயே இலக்கிய படைப்புகள் நிகழ்ந்துள்ளன. அக இலக்கியத்தில் இடம்பெறும் கூற்றுகள் வழி தலைவி என்ற பாத்திரத்தின் கட்டமைப்பு உறுதிப்படுகிறது.

அச்சம், மடம், நாணம் ஆகியவற்றை பெண்மைக் குணங்களாகக் குறிப்பிடும் தொல்காப்பியர் (தொல்.களவியல்.8) பெண்ணின் கடமைகளாகக் குறிப்பிடுவன எல்லாம் கணவனுக்கும் குடும்பத்திற்கும் பயன்தருவனவாக உள்ளன.

**'கற்புங் காமமும் நற்பா லொழுக்கமும்**
**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்**
**பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்' (தொல்.கற்பு.11)**

என்பது தொல்காப்பியம். இதில் ஆணின் தேவைகளை நிறைவேற்றுபவளாகவும் தனக்கென எந்தப் பெருமையும் சுயமும் இல்லாதவளாகவும் பெண் அமைய வேண்டும் என்ற கருத்தே மேலோங்கியுள்ளது. அதோடு

**'உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்**
**செய்தீர்க் காட்சிக் கற்புச் சிறந்தன்று' (தொல்.களவு.22)**

என்ற தொல்காப்பிய நூற்பா பெண் ஒடுக்குமுறையைத் தெளிவாகவே காட்டுகிறது. இதற்கு உரை கூறும் நச்சினார்க்கினியர், 'இச்சூத்திரம் இரண்டும் நாடக வழக்கன்றிப் பெரும்பான்மை உலகியல் வழக்கே' (தொல்.களவு.22.நச்சர் உரை) என்று குறிப்பிடுவது முக்கியத்துவம் பெறுகிறது. கபிலர், 'குறிஞ்சிப்பாட்டில் அமைதி, மேம்பாடு, ஒழுக்கம் மூன்றையும் பெண்மைக் குணங்களாகக் கூறுகிறார்.' (கபிலர், குறிஞ்சிப்பாட்டு, 13-81 வரிகள்) பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஏலாதி 'நிறையுடைமை, நீர்மையுடைமை, பொறையுடைமை, பொய்கூறாமை, புலால் உண்ணாமை ஆகிய குணங்கள் உடையாளைத் தாயென்று கூறலாம் என்று கூறுகிறது. இங்கு 'தாய்' என்ற சொல்லுக்கு 'சிறந்த பெண்' என்ற பொருள் அமைகிறது.

எழுதப்படாத சமூகச் சட்டங்காளாக விளங்குகிற இலக்கியங்களில் உள்ள பெண் பற்றிய பதிவுகளைத் தொகுத்துப் பார்த்தால் கற்பு, காமம், ஒழுக்கம், பொறுமை, அச்சம், அறியாமை, நாணம், அமைதி, மேம்பாடு, உள்ளத்து உணர்வுகளை வெளியில் காட்டாத நிறை, விருந்தோம்பல், சுற்றத்தாரைப் பாதுகாத்தல் ஆகியவை பெண்ணுக்குரிய பண்புகளாகக் கூறப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

பெண் திருமணத்தை நோக்கியே வளர்க்கப்படுவது தான் தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு. பெண்ணுக்குத் திருமணம் என்பது அவளைக் கொடுப்பதற்கு உரிமையுடையவர்கள் கொடுக்கவும் வாங்குவதற்கு உரிமையுடையவர்கள் வாங்கவுமான ஒரு வியாபாரமாகவே அமைந்துள்ளது. 'களவு நெறியில் தலைவியைப் புணர்ந்து மகிழ்ந்த

தலைவன் அவளை விட்டு நீங்கிய நேர்மையின்மை பெருகியதால் தான் சான்றோர் பெருமக்கள் திருமணச் சடங்கை ஏற்படுத்தினர்' (தொல்.கற்பு.3) எனப்படுகிறது.

பெண்ணின் வாழ்க்கை முழுமையடைவது திருமணத்தில் தான் என்ற சமூக நிர்ணயமும் அதில் ஆணின் நலமே மையப்படுத்தப்பட்டிருந்ததும் அக இலக்கியங்கள் காட்டும் ஐந்திணைப்பகுப்பு, அவற்றின் உரிப்பொருள் விளக்கம் ஆகியவற்றால் தெளிவுபடுகிறது. 'புணர்தல்' என்னும் குறிஞ்சி உரிப்பொருள் தவிர ஏனைய நான்கு உரிப்பொருள்களிலும் ஆணின் நலமே முன்நிறுத்தப்பட்டுள்ளது. பெண்ணின் உணர்வு புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பது ஆய்வாளர்கள் அனைவரும் கூறும் கருத்து.

'அன்பின் ஐந்திணைக்கு உரிய உரிப்பொருள்களை உரித்துப் பார்க்கும் போது அவை ஆண்களின் தனிப்பட்ட மற்றும் சமூக ரீதியான நலன்களுக்காக உருவாக்கப்பட்டவை என்பதும் பெண்கள் ஆண்களுக்காகவே தங்களை வடிவமைத்துக் கொள்ள வேண்டியவர்கள் என்பதும் தெளிவாகிறது. தனிச் சொத்துடைமையைக் காக்கவும் அரசு அதிகாரத்தை நிலைநிறுத்தவும் தோன்றிய குடும்ப அமைப்பு சிதையாமல் இருக்க அதற்குள் பெண்ணைச் சிறைப்படுத்திய கருத்தியல்களாக உரிப்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.' (தி.சி.சத்தியம், 'பெண்ணியமும் உரிப்பொருளும்', பக்.53-57) என்ற ஆய்வாளர்கள் கருத்து அகப்பொருள் தலைவியின் வாழ்வியலை நோக்கும் போது மிகப் பொருத்தமாகவே தோன்றுகிறது.

தலைவி 'இல்லாள்' என்ற பெயருடனும் பெருமையுடனும் மகப்பேற்றுக்கான உரிமை படைத்தவளாகிறாள். 'மனைவிக்குக் கருத்தங்கும் காலத்து தலைவன் அவளை விட்டு நீங்காமல் இணைந்திருக்க வேண்டும்' (தொல்.கற்பு.10) என்ற கட்டுப்பாட்டை நோக்கும் போது, தலைவனது பரத்தமை ஒழுக்கத்திற்கு பெரிய அளவில் கண்டனம் எழவில்லை என்பது புலப்படுகிறது. பரத்தமை ஒழுக்கம் பற்றியதாக இருப்பது தலைவியின் பாதுகாப்பற்ற வாழ்க்கை, ஊடல் கலந்த உறவு, தனிமைத் துயரம், போராட்டமாகச் சுழன்ற உளவியல் ஆகியவற்றைக் காட்டுகின்றன. தலைவனை புறக்கணித்து அல்லது பிரிந்து வாழும் பெண் பழிதூற்றலுக்கும் பசி, பட்டினிக்கும் ஆளாவாள் என்ற அச்சமும் அச்சுறுத்தலும் காரணமாகப் புறவொழுக்கம் மேற்கொண்ட தலைவனுடன் ஊடினாலும் மீண்டும் கூடி வாழ அறிவுரைக்கப்பட்டது. 'வாயில் மறுத்தல்' ஆணின் புறத்தொழுக்கத்தைக் கடிய பெண்ணுக்கு உரிமை இருப்பது போன்ற தோற்றத்தைத் தருகிறதேயொழிய உண்மையில் பெண்ணைப் போக்குக் காட்டி, சமாதானப்படுத்தும் உபாயமாகவே அது அமைந்துள்ளது.

'மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து, தலைவியினது எதிர்ப்பின் அடையாளமாக வாயில் மறுத்தல் காணப்பட்டாலும் ஆழ்ந்து நோக்குமிடத்து, பெயரளவினதாக நடைமுறைச்

சாத்தியமற்றதாக, கடிதோச்சி மெல்ல எறிவதாகவே இருந்துள்ளது' என வ.இராசரத்தினம் கூறுவது இதை வலுப்படுத்தும். (வாயில் மறுத்தல் தலைவி எதிர்ப்பின் வெளிப்பாடா? செவ்வியல் இலக்கியங்களில் பெண்குரல், பக்.19-29)

தொழில் நிமித்தமாகப் பிரிந்து செல்லும் தலைவனுடன் தலைவி செல்லக் கூடாது; பாசறைக்குக் குலப் பெண்ணை அழைத்துச் செல்லக் கூடாது; பெண்கள் கடல் கடந்து செல்லக் கூடாது. பெண்ணின் காதலும் காமமும் மட்கலத்துக் கசிவு போன்று வெளிப்படலாமே தவிர தலைவனிடம் வெளிப்படையாகத் தனது உணர்வை அவள் கூறக்கூடாது. பெண் தனது உணர்வுகளை வெளிப்படையாகக் காட்டாமல் மறைத்து வாழ்வது தான் அவளுக்குச் சிறப்பு. பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்ட தலைவன் திரும்பி வந்தால் தாய் போல் கழறித் தழுவிக் கொள்ள வேண்டும். இரண்டாவது ஒரு பெண்ணை மணந்து வீட்டிற்கு அழைத்து வந்தாலும் தலைவி அவனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். மென்மையும் அடக்கமும் தனக்குத் தானே அழகுபடுத்திக் கொள்ளத் தெரியாத தன்மையும் குலப்பெண்களின் பண்புகளாகும். பாலது ஆணையால் ஓர் ஆணைக் காதலிக்கும் தலைவி அவனையே கணவனாக அடைவதுதான் கற்புடைமை. கணவனது வீடு வறுமையுற்றாலும் தந்தை வீட்டுச் செல்வத்தை மறுத்துப் புகுந்த வீட்டுச் சூழலில் நிறைவு கொள்வது குடும்ப பெண்ணுக்குப் பெருமையாக அமையும். இவ்வாறான கற்பித்தல்களால் தலைவியின் வாழ்க்கை கட்டமைக்கப்பட்டுள்ளமை இலக்கியங்களில் தெளிவுபடுகிறது.

**பரத்தையின் வாழ்வியல்**

உடைமைச் சமூகத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்த பெண்களின் வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கான தேடலும் வளம் படைத்த ஆணின் உடற்பசியைத் தீர்ப்பதற்கான தேடலும் செய்து கொண்ட சமரசத்தின் விளைவே பரத்தையர் சமூகத்தின் தோற்றம். பதியிலாராக, ஆண்களின் வரம்பு மீறிய இன்ப நாட்டத்திற்குத் தீனி போடுபவர்களாக வரையறுக்கப்பட்ட பெண்கள் பரத்தையர், பொருட் பெண்டிர் என்று பல்வேறு பெயர்களால் சுட்டப்பட்டனர்.

ஓர் ஆணுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட பெண்கள் என்ற வாழ்க்கை நெறியே பரத்தமை ஆயிற்று. மனைவியை மதிப்போடு வீட்டு எல்லைக்குள் நிறுத்திவிட்டு, காமக்கிழத்தி, இற்பரத்தை, சேரிப்பரத்தை என்று வகைவகையாகப் பெண்களை வரிந்து கொண்ட பரத்தன் (அகம்.146) சமுதாயத்தால் புறக்கணிக்கப்படவில்லை.

"அடித்தட்டு மக்களின் அடிப்படைத் தேவைக்கும் வாழ்க்கைக்கும் உத்திரவாதம் இல்லாத நிலையில் ஓர் ஆணுக்காகப் பல பெண்களிடையே போட்டியும் பூசலும் ஏற்பட்டுள்ளன. இந்த வாழ்வியல் செய்தியை நாடக வழக்காக்கி, திணை - துறை

அமைத்து, ஊடலும் ஊடல் நிமித்தமும் என்று ஓர் உரிப்பொருள் வகுத்துப் பாடப்பட்டவை மருதத் திணைப்பாடல்கள்'' (சரோஜினி, 'பரத்தையர் மரபும் மனநிலையும்' ப.1796) என்று ஆய்வாளர்கள் கூறும் கருத்து பரத்தை என்ற சமூக உயிரிக்கும் பரத்தமை பற்றிய இலக்கியப் பதிவிற்குமான தொடர்பைத் தொட்டுக் காட்டுகிறது.

பரத்தையருக்கு உடல் அழகே மூலதனம். அதனால் பரத்தமைச் சமூகத்தில் பிறந்த பெண்குழந்தை வரவேற்பிற்கு உரியதாக இருந்துள்ளது. தாய் அதன் அழகைப் பேணிக் காத்தாள் (அகம் 276:15) பரத்தையின் அழகு எங்கும் பேசப்படுவது அவளுக்குப் பெருமையாகியது. இரும்பு போன்ற உறுதியான மனம் படைத்த ஆண்களையும் கலங்கச் செய்வதான அழகு தான் பரத்தையரின் சொத்தாக மதிக்கப்பட்டது. (அகம்.116)

அழகிய மேனி, மழைக் காலத்தில் மலரும் ஈங்கைச் செடியின் தளிர் போன்ற மாமை நிறம், ஒளி பொருந்திய சிறிய நெற்றி, நரந்தத்தின் நறுமணம் கமழும் தாழ்ந்து அடர்ந்த கூந்தல், செவ்வரி படர்ந்த மையுண்ட கண்கள், அழகிய இதழ்கள், கூர்மையான பற்கள், குளிர்ந்த சந்தனம் மணக்கும் தோற்றம், மெல்லிய சந்தினை உடைய முன் கை, மோதிரம் அணிந்த மெல்லிய விரல்கள், அழகிய பருத்த மார்பகம், பொன்னை உருக்கி வார்த்தது போன்று உடலெங்கும் விளங்கும் தேமல் என்பனவெல்லாம் பரத்தையின் உடல் அழகுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ள வருணனைகள். அதற்கும் மேலாக பொன் அணிகளைச் சுமந்திருப்பது போன்று ஏராளமான அணிகளுடன் அவள் காட்சி தந்தாள்.

பருவமும் கவர்ச்சியும் கொண்ட குறுமகள் (அகம்.326), பழையன் எறிந்த வேல் குறி பிழையாது பகைவரைத் தைத்தல் போல தான் நோக்கியவரைக் கவர்வதில் 'பிழையல கண்' (அகம்.326) என்பது பரத்தையின் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது. பழையனுக்குரிய போஓர் (அகம்.186), அட்டவாயில் (அகம்.326), எவ்விக்குரிய நீழல் (அகம்.366), குட்டுவனுக்குரிய மாந்தை (அகம்.376), சேரனுக்குரிய வஞ்சி (அகம்.396) ஆகிய ஊர்களின் அழகுக்கு இணையான அழகியர்களாகப் பரத்தையர் காட்டப்பட்டுள்ளனர். யாழிசைக்கவும் முழவினைக் குறுந்தடியால் முழக்கவும் வல்லவர்களான பரத்தையர் இளமைச் செருக்கு உடையவர்களாக இருந்தனர். இவை எல்லாமே தனக்கென ஒரு குடும்பம், கணவன், குழந்தைகள் என்ற உறவுகள் இல்லாத நிலையில் நிரந்தரமற்ற வாழ்க்கைக்காக, ஆடவரைக் கவரும் முயற்சியின் பாற்பட்டனவாகும். 'எவ்வளவு தான் அழகும் புனைவும் கொண்டிருந்தாலும் இப்பெண்களின் வாழ்க்கையில் கிடைத்த சுகம் தற்காலிகமானது; உறவுகள் உத்திரவாத மற்றவை' என்று பரத்தையரின் வாழ்வியல் பற்றி சரோஜினி கூறுவது பொருத்தமானதே.

உரிமை இல்லாத நிலையில் ஆணின் உறவை மட்டுமே பெற்றிருந்த பரத்தையர், உடல் தளர்ச்சியுற்ற காலத்தில் ஒதுக்கப்பட்டுள்ளனர். மிகு புனலில் நீராடி முடித்ததும்

கைவிட்டுப் போகும் புணையைப் போன்று இளமையில் இன்பம் அனுபவித்துவிட்டு, முதுமையில் கைவிட்டுப் போகும் ஆண்களால் பரத்தையரின் வாழ்வு பரிதாபத்திற்குரியதாகியுள்ளது. அவர்கள் ஊர் தோறும் தெரு தோறும் அவனைத் தேடி அலைந்துள்ளனர். (அகம்.146) ‘அவளிடம் இளமையும் அவனிடம் வளமையும் உள்ள வரை மட்டுமே தொடரும் உறவுக்காய் உருகி உருகி அலைந்த பெண்கள் ஊராரின் பழிதூற்றலுக்கும் அஞ்சாமல் பொது இடங்களில் அவனோடும் அவனைத் தேடியும் அலைந்துள்ளனர்’ என்ற ஆய்வுச் செய்தி பரத்தையர் வாழ்வின் ஒரு கூறைத் தெளிவாய்க் காட்டுகிறது.

பரத்தையர் புனல் விளையாட்டு, பொழில் விளையாட்டு போன்று பொது இடங்களில் தலைவனுடன் கூடி மகிழ்வதை விரும்புவர்; தலைவன் பிரிந்தால் அவனுடன் ஊடுவர்; சினந்து நோக்குவர்; தலைவனின் மாலையைப் பறித்து எறிகிற அளவிற்கு ஆத்திரம் கொள்வர்; அவன் வைவிட்டுச் சென்றால் பொங்கி எழுவர்; தலைவனது பெயருக்குக் களங்கம் ஏற்படுவது குறித்துக் கவலைப்படமாட்டார்கள். பெண்ணுக்குச் சமூகம் கற்பித்த ஆற்றியிருத்தலுக்கு மாறான நிலையில் அவர்களது செயல்பாடுகள் அமையும்.

தலைவியைப் பழித்தல், வஞ்சினம் மொழிதல் எனத் தனது ஆத்திரத்தை வெளிப்படுத்திய சேரிப்பரத்தையர், ‘நுங்கை ஆகுவென்’ (அகம்.386) என உறவும் அன்பும் பாராட்டும் காமக்கிழத்தி ஆகியோரை இலக்கியப் பதிவில் காணமுடிகிறது.

தலைவனது மகனைத் தெருவில் கண்டால் ‘வருக மாள என் உயிர்’ என்று உச்சி மோந்து கொஞ்சும் பரத்தையரின் தாய்மைப் பண்பு முக்கியத்துவம் பெறவில்லை. அவள் மகப்பேற்று உரிமை மறுக்கப்பட்டவள். மகப்பேற்று உரிமை உடைய மனைவி பூப்பு நீராடியபோது அவள் கருவுறும் வாய்பிற்காகத் தன்னுடன் வாழும் தலைவனை அவளிடம் செல்லவிடுக்க வேண்டிய கடமை பரத்தையுடையதாகியது. ‘நின் மனைவி வவ்வலும் அஞ்சுவல்’ (அகம்.396) என்று தலைவியைப் பழிக்கும் பரத்தையரில் ‘மாசில் குறுமகள்’, ‘நின் மகன் தாய்’, ‘வானத்து அணங்கருங் கடவுள் அன்னோள்’ (அகம்.16) என்றெல்லாம் தலைவியால் பாராட்டப் பெறும் தகுதியுடையோரும் இருந்துள்ளனர்.

உரிமையற்று, வாழ்விற்கான உத்திரவாதம் இல்லாமல் வாழ்ந்த பரத்தையரின் அச்சமும் ஆவேசமும் அவர்களது உளவியல் வெளிப்பாடுகள் ஆவது தவிர்க்க இயலாதனவாகும்.

தலைவிக்கும் பரத்தைக்கும் உரியனவாகச் சமூகத்தால் வகுக்கப்பட்டுள்ள வாழ்வியல் நெறிகள் வேறு வேறானவை. கற்பு, நாணம், பொறுமை, நிறை, ஒழுக்கம், விருந்துபசரித்தல், சுற்றம் பேணல் ஆகிய குடும்பப் பண்புகள் தலைவியிடம் இருந்தன

என்பது அகப் பாடல்களில் காட்டப்படுகின்றன. தலைவன் உடனிருக்கும் காலத்தில் அலங்காரம் செய்து கொள்ளும் பெண்கள் தலைவன் தம்மோடு இல்லாத காலங்களில் தம்மை அலங்கரித்துக் கொள்வதைத் தவிர்ப்பது இலக்கியச் செய்தியாக உள்ளது. தலைவியின் அழகும் அலங்காரமும் தலைவனுக்காகவே! என்ற கற்பித்தலுக்கான களம் இது. ஆனால் பரத்தையர் மலர்களாலும் அணிகளாலும் தம்மை அலங்கரித்துக் கொண்டு வளையல்கள் ஒலிக்க, கைவீசி தெருவில் நடக்கின்றனர். அவர்களின் மனதில் ஆடவரைக் கவரும் நோக்கம் மேலோங்கியுள்ளதாக இலக்கியம் கூறுகிறது. குலமகளிர் கணவனுக்காகவும், பரத்தை பிற ஆடவரைக் கவருவதற்காகவும் ஒப்பனை செய்து கொள்கிறார்கள் என்பது இருவரிடையே அமைந்துள்ள வாழ்வியல் நெறியின் முரண்பாடாகும்.